1969 மார்ச் 28]

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, திண்டுக்கல் குடி நீர் திட்டத்திற்குச் சென்ற ஆண்டே ஏற்பாடு செய்யப்பட்டது. இன்னும் அந்த வேலை ஏன் துவக்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து.: திண்டுக்கல் பகுதிக்கு ஏறத்தாழ 12 இலட்சம் 67 ஆயிரம் ரூபாய் செலவழித்து ஒரு திட்டம் நடத்திக்கொண்டு வருகிருர்கள். ஆனல், அதை இன்னும் நிறைவேற்றவில்லை. சர்விஸ் ரிசர்வாயர் என்கின்ற அந்தத் தேக்கம் கட்டப்பட்டு வருகிறது. அது முடிந்துவிட்ட பிறகு தண்ணீர் விநியோகிக்க முடியும்.

திரு. பி. துரைராஜ் : தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் புளியங்குடி நகரில் குடி தண்ணீருக்கு எவ்வளவு திண்டாட்டம் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களே நேரில் பார்த்திருப்பதால் நன்ருக அறிவார்கள். அந்த நகரத்திற்குக் குடி தண்ணீர்த் திட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு ஏதாவது அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி அனுமதி அளிக்கப்பட்டிருந்தால், அதைக் கூடிய விரைவில் செயல்படுத்த அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான் ஏற்கனவே சொன்னேன். 12 கோடி 50 இலட்ச ரூபாய் செலவில் 31 புதிய திட்டங்களை எடுத்துக்கொண்டிருக்கிருேம் என்று. நெல்லை மாவட்டத்தில் இருக்கும் திட்டங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனவா என்பதை நான் இப்பொழுது உறுதியாகச் சொல்லமுடியாது.

நாககுப்பத்துக்கு உயர்நிலைப் பள்ளி

***518 வின —திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கள்ளக்குறிச்சி வட்டம் நாகக்குப்பம் கிராமத்தில் உயர்நிலைப் பள்ளி துவக்கப்படவேண்டுமெனக் கோரிக்கை கிடைக்கப்பெற்றதா ?

(இ) ஆம் எனில், எந்த ஆண்டு கோரிக்கை கிடைக்கப் பெற்றது அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 1967–68, 1968–69-ம் ஆண்டுகளில் பெறப்பட்டது. அது தள்ளி வைக்கப்பட்டது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : நாக குப்பத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னலேயே அவர்கள் பணம் கட்டியிருக்கிருர்கள். பணத்தோடு சேர்த்து ஒரு கட்டடமும் கொடுப்பதற்கு அங்கிருப்பவர்கள் வாக்குறுதி அளித்தும் எந்தக் காரணத்தால் அந்த உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்கப்படவில்லை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த இடத்தில் உயர்நிலைப் பள்ளி தேவையில்லை என்று பரிந்துரை செய்திருக்கிருர்கள். ஆனல் அதற்குப் பின்னல் சட்டமன்ற உறுப்பினர் திரு. கேசவலு அவர்கள் அதை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிருர்கள் அதே போல் இயக்குனர் இந்த ஊரில் பள்ளிக்கூடம் வைப்பது பற்றி மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று அரசாங்கம் சொல்லியிருக்கிறது.